# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : பொதுத்தமிழ் (இலக்கணம்)

பகுதி : **விடைக்கேற்ற வினாவை தேர்ந்தெடுத்தல்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# விடைக்கேற்ற வினாவை தேர்ந்தெடுத்தல்

**விடைக்கேற்ற வினாவை தேர்ந்தெடுத்தல்**

**வினா வகை:**

- ஒன்றைப் பற்றி அறிந்து கொள்ள ஒருவரை ஒருவர் வினவுகின்றனர். அவ்வாறு வினவும் வினா அறிவினா, அறியா வினா, ஐயவினா, கொளல் வினா, கொடை வினா, ஏவல் வினா என ஆறு வகைப்படும்.

**1. அறிவினா:**

- தம் அறிவோடு பிறர் அறிவை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும் (அ) தாம் அறிந்த ஒரு பொருள் பற்றிப் பிறரிடம் வினவுவது அறிவினா எனப்படும்.

எ.கா.: இப்பாடல் பொருள் யாது? - என ஆசிரியர் மாணவரிடம் வினவுவது.

**2. அறியா வினா:**

- தான் அறியாத ஒன்றை பிறரிடம் வினவி அறிந்து கொள்வது அறியா வினா எனப்படும்.

எ.கா: இப்பாடல் பொருள் யாது? - என மாணவன் ஆசிரியரிடம் வினவுவது.

**3. ஐயவினா:**

- ஒன்றன் மீது ஐயமுற்று ஐயத்தைப் போக்கிக் கொள்ள வினவும் வினா ஐயவினா எனப்படும்.
- எ.கா: தொலைவில் தோன்றுவது எருதோ ! பசுவோ ?

**4. கொளல் வினா:**

- ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு பிறரிடம் வினவும் வினா கொளல் வினா எனப்படும்.
- எ.கா. மாணவன் கடைக்குச் சென்று "பத்தாம் வகுப்புத் தமிழ்ப் புத்தகம் உள்ளதோ"? என்று வினவுவது.

**5. கொடை வினா:**

- இல்லாதவர்க்கு ஒரு பொருளைத் கொடுத்தற் பொருட்டு வினவுவது கொடை வினாவாகும்.
- புலவரிடம் பொருள் இல்லையோ? என்று மன்னன் புலவரிடம் வினவுவது கொடை வினாவாகும்.

6. <u>ஏவல் வினா:</u>

- ஒரு செயலைச் செய்யுமாறு ஏவுவதற்பொருட்டு வினவும் வினா ஏவல் வினா எனப்படும்.
- ஆசிரியர் மாணவனிடம் " இப்பாடலை மனப்பாடம் செய்து விட்டாயா"? என்று வினவுவது.

**சுட்டெழுத்துக்கள்**

- சுட்டிக்காட்ட உதவும் எழுத்துக்கள் சுட்டெழுத்துக்கள் ஆகும். அவை மூன்று அ, இ, உ

| | |
|---|---|
| அவன், இவன் | அவள், இவள் |
| அவர், இவர் | அது, இது |
| அவை, இவை | அந்த, இந்த |
| அங்கு, இங்கு | |

சான்று:

- அந்த பையன், அப்பையன், இவ்வீடு, அந்தப்பக்கம், இந்தவீடு
- 'உ' என்னும் எழுத்தைச் சுட்டிக் சொல்ல நாம் இப்பொழுது பயன்படுத்துவதில்லை.
- சான்று: உதுக்கண் (சற்றுத் தூரத்தில் பார்), உப்பக்கம் (முதுகுப்பக்கம்) உம்பர்(மேலே)

**அகச்சுட்டு :**

- சொல்லின் அகத்தே நின்று சுட்டுப் பொருளைத் தருவது -சுட்டெழுத்தை நீக்கினால் பிற எழுத்து பொருள் தராது. சான்று: அவன்

**புறச்சுட்டு :**

- சொல்லின் புறத்தே நின்று பொருள் தருவது புறச்சுட்டு எனப்படும் - சுட்டெழுத்தை நீக்கினாலும் பிற எழுத்துக்கள் பொருள் தரும். சான்று:
- அவ்வீடு, இக்குதிரை

**சேய்மைச்சுட்டு -"அ"**

- தொலைவில் உள்ளதைச் சுட்டி காட்ட உதவுவது சேய்மைச் சுட்டு எனப்படும்.
- சான்று: அவன், அது

**அண்மைச்சுட்டு - "இ"**

- அருகில் உள்ளதைச் சுட்டுவது அண்மைச்சுட்டு எனப்படும்.
- சான்று: இது, இவன்

**வினா எழுத்துக்கள்**

- வினாப்பொருளை உணர்த்தும் எழுத்துக்கள் வினா எழுத்துகள் ஆகும். வினா எழுத்துக்கள் ஐந்து - ஆ, யா, ஓ, எ, ஏ ஆகும்.
- அகத்தே நின்று வினாப்பொருளை தருவது -யா, எ, ஏ (ஏ -தான் அழுத்தம் தர)
- புறத்தே நின்று வினாப்பொருளை தருவது - ஆ, ஓ
- ஏராளமாய் கேள்வி கேட்கவும் -ஆ, செய்தியை வினாவாக்கவும் - ஆ என்னும் வினா எழுத்து பயன்படுகிறது.
- சான்று: எங்கு? எது? எப்படி? யார்? யாவை? யாது? அன்றோ? அப்படியா? அதுவா? அவனோ? நீயா? நானா? அழுத்தம் தரும் வினா எழுத்து "ஏ" சொல் - தான்

**இன எழுத்துக்கள்**

- அ-ஆ, இ-ஈ, உ-ஊ, எ-ஏ, ஒ-ஓ,
- ஐ-இ, ஔ-உ
- க்-ங், க்-ஞ், ட்-ண், த-ந், ப்-ம், ற்-ன்
- க-ங, ச-ஞ, ட-ண, த-ந, ப-ம, ற-ன

சான்று: சிங்கம், தங்கை, மஞ்சள், அஞ்சாதே, பண்டம், பந்தல், கம்பன், தென்றல்